டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.11.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 125 - Madurai | Online Edition

# தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாடு 2025-ஐ பிரதமர் தொடங்கி வைத்து உரையாற்றினார்



புது தில்லி, நவ.19

தமிழ்நாட்டின், கோயம்புத்தூரில் தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாடு 2025-ஐ பிரதமர் நரேந்திர மோடி நேற்று (19.11.25) தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், கோயம்புத்தூரை கலாச்சாரம், கனிவு மற்றும் படைப்பாற்றலின் நகரம் என்று குறிப்பிட்டு, தென்னிந்தியாவின் தொழில் முனைவோரின் ஆற்றல் சக்தியாக விளங்குகிறது என்று கூறினார். இந்த நகரத்தின் ஜவுளித்துறை, தேசிய பொருளா தாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக குறிப்பிட்டார். கோயம்புத்தூரின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ராதாகிருஷ்ணன் தற்போது குடியரசு துணைத் தலைவராகப் பொறுப்பு வகிப்பது, இந்த நகருக்குக் கூடுதல் சிறப்பைத் தருவதாக அவர் கூறினார்.

வரும் ஆண்டுகளில் இந்திய வேளாண்மைத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைத் தாம் எதிர்பார்ப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இயற்கை விவசாயத்தில் உலகளாவிய மையமாக மாறும் பாதையில் இந்தியா முன்னேறி வருகிறது என்று மோடி தெரிவித்தார். இந்தியாவின் பல்லுயிர் பெருக்கம் அதிகரித்து வருவதாகவும், விவசாயத்தை நவீன மற்றும் அளவிடக்கூடிய வாய்ப்பாக இளைஞர்கள் கருதுவதாகவும் பிரதமர் கூறினார்.

இந்த மாற்றம், ஊரகப் பொருளாதாரத்தை பெருமளவு வலுப்படுத்தும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் ஒட்டு மொத்த வேளாண் துறையும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை சந்தித்து வருவதாக அவர் கூறினார். வேளாண் கடன் அட்டை திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டு விவசாயிகளுக்கு சுமார் ரூ.10 லட்சம் கோடி உதவித்தொகை வழங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். உயிரி உரங்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு கூடுதல் பலன்களை வழங்கியிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் கௌரவிப்பு நிதித் திட்டத்தின் 21-வது தவணை விடுவிக்கப்பட்டிருப்பதன் மூலம் தமிழ்நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்திருப்பதாக பிரதமர் கூறினார். இந்த திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.4 லட்சம் கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். 21-வது நூற்றாண்டில் இயற்கை விவசாயத்தை விரிவுபடுத்துவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், காலநிலை மாற்றங்களை சந்திக்கவும், ஆரோக்கியமான மண்ணை பராமரிக்கவும், ஆபத்தான ரசாயனங்களில் இருந்து மக்களை பாதுகாக்கவும் இயற்கை விவசாயம் உதவுகிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

இயற்கை விவசாயத்தைப் பின்பற்றுமாறு மத்திய அரசு விவசாயிகளை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக மோடி கூறினார். கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கை வேளாண்மை சார்ந்த தேசிய இயக்கத்தின் மூலம் ஏற்கனவே லட்சக்கணக்கான விவசாயிகள் இணைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்த முன்முயற்சியின் நேர்மறை தாக்கத்தை தென்னிந்தியாவில் காண முடிகிறது என்றும், தமிழ்நாட்டில் மட்டுமே தோராயமாக 35,000 ஹெக்டேர் நிலம் இயற்கை விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சிறு தானியங்களின் சாகுபடியை இயற்கை வேளாண்மை யுடன் இணைப்பதால் பூமியை பாதுகாக்க முடியும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தமிழ்நாட்டில் தேன் மற்றும் சிறு தானியத்தால் செய்யப்பட்ட தேனும் தினை மாவும் முருகக் கடவுளுக்கு படைக்கப்படுவதை அவர் சுட்டிக் காட்டினார். தமிழ்நாட்டின் கம்பு, சாமை, ராகி போன்ற சிறு தானியங்கள் பல தலைமுறைகளாக பாரம்பரிய உணவு முறைகளில் இருந்து வருவதாக அவர் குறிப்பிட்டார். வளர்ச்சி யடைந்த இந்தியாவை உருவாக்க எதிர்காலத்திற்குத் தேவையான வேளாண் சூழலியலை கட்டமைப்பது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். இயற்கை விவசாயத்தின் ‘ஒரு ஏக்கர், ஒரு பருவம்’ என்ற நடைமுறையைப் பின்பற்றுமாறு விவசாயிகளை பிரதமர் கேட்டுக்கொண்டார். வேளாண் பாடத்திட்டத்தில் இயற்கை விவசா யத்தை முக்கிய பாடமாக சேர்க்குமாறு விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அவர் கோரிக்கை விடுத்தார். இயற்கை விவசாயத்தை முழுவதும் அறிவியலின் அடிப்படையி லான இயக்கமாக மாற்றுவது நமது இலக்காக இருக்க வேண்டும், என்று அவர் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# வேளாண் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு




திருச்சி, நவ.19

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்ந்த திட்டங்கள் பற்றி வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம், ராஜசேகர் ஆய்வு மேற்கொண்டார்.

வேளாண்மை துறையின் கீழ் செயல்படும் மத்திய திட்டங்களான தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், அணுசாரணை ஆராய்ச்சி திடல் மற்றும் வேளாண்மை தொழில்நுட்பம் மேலாண்மை முகமை அட்மா திட்டம் போன்ற திட்டங்களை ஆய்வு செய்தார்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாழவந்தான் கோட்டை கிராமத்தை சேர்ந்த சாமிநாதன் என்ற விவசாயி நெல் இயந்திரம் மூலம் நடவு செய்த திடலை பார்வையிட்டு நடவு இயந்திரத்திற்குண்டான வாடகை குறித்து கேட்டறிந்து நெல் இயந்திர நடவு பயன்பாடு பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டங்களை ஆய்வு செய்து செயல்விளக்கம் இனத்தின் கீழ் குமார் என்ற விவ சாயிக்கு கையடங்கு பால் கறவை இயந்திரத்தை முழு மானி யத்தில் வழங்கி அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்.

வேங்கூர் கிராமத்தில் முத்துக்குமார் என்ற விவசாயியின் வயலில் அமைத்துள்ள அணுசாரணை ஆராய்ச்சி திடலை பார்வையிட்டார்.

ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் நாகராஜன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் திலகவதி, செல்வலட்சுமி உடன் இருந்தனர்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கார்த்திகைபட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற தரமான விதை அவசியம்

கார்த்திகைபட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற குறைந்த வயதுடைய தரமான உயர் விளைச்சல் இரகங்களை தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும் என்று மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.சோபனா தெரிவித்துள்ளார்.

கார்த்திகைபட்டம் என்பது கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் விதைப்பு செய்யப்படுவதாகும். கார்த்திகை மாதத்திற்குள் நிலக்கடலையை விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது, போதிய மழை, சரியான தட்பவெப்ப நிலை சாதகமாக இருப்பதால் அதிகமகசூல் பெறப்படுகிறது. நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். பயிரிடும் விதை தரமானதாக இருப்பது அவசியம் என்பதால் விதையின் தரத்தை பரிசோதிக்க அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசு விதை பரிசோதனை நிலையங்களில் விதைகளை கொடுத்து அதன் தரத்தை அறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன.

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும் குறைந்தபட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். நிலக்கடலை விதைப் பரிசோதனை செய்ய 500 கிராம் அளவிற்கு நிலக்கடலை விதை மாதிரி எடுத்து பயிர், இரகம், நிலை மற்றும் குவியல் எண் ஆகியவை குறித்த விவரத்துடன் கொடுத்து விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளம், விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம். ஒரு மாதிரி பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812


# பிரதம மந்திரியின் கவுரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற தனித்துவ அடையாள எண் கட்டாயம் பெற வேண்டும்



புதுக்கோட்டை, நவ.19

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டார விவசாயிகள் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கவுரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன் பெற தனித்துவ அடையாள எண் கட்டாயம் பெற வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் சு.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அனைத்து விவசாயிகளும் அரசின் திட்டப் பலன்களை பல்வேறு பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள் பயிர் சாகுபடி அறிக்கை போன்ற ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்பிக்க வேண்டியுள்ளது என்றும் அதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையில் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாக அனைத்து விவரங்களையும் மின்னனு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது விவசாயிகளின் பதிவு விவரங்களுடன் ஆதார் எண் கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களையும் விடுப் பாடின்றி இணைக்கும் பணி சம்மந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் சிறப்பு முகாம் மூலம் நடைபெற்று வருகிறது என்றும் எனவே மணமேல்குடி வட்டார விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களால் நடத்தப் படும் சிறப்பு முகாம்கள் அல்லது அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்களது ஆதார் எண் கைபேசி எண் மற்றும் நில உடமை விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் மணமேல்குடி கேட்டுக்கொண்டுள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் இணைந்த வயல்வெளி ஆய்வு

சிவகங்கை, நவ.19

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் கண்ணங்குடி கிராமத்தில் அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் இணைந்த வயல்வெளி ஆய்வு வேளாண்மை துணை இயக்குநர் சண்முகஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.



மேலும் அவர்கள் கூறியதாவது, நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் அதிகமான நீரை தேக்கி வைப்பத்தால் புகையான் தாக்குதல் மற்றும் தூர் கட்டும் பருவத்தில் ஆணைக்கொம்பன் ஈ தாக்குதல் உண்டாகும். இதனை கட்டுப்படுத்த மண் பரிசோனை முடிவுகளின்படி தேவையான அளவு தழைச்சத்தை இட வேண்டும் என்றும் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி ஏக்கருக்கு 12 வீதம் வைக்க வேண்டும். மேலும் வரப்பு பயிர் உளுந்து பயிரிட வேண்டும் என கூறினார். மேலும் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உதவி பேராசிரியர் மகேஸ்வரன், இவ்வயல் ஆய்வில் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் நிவர்த்தி முறைகள், இலை வண்ண அட்டையை பயன்படுத்திதழைசத்து உரமிடுதல் மற்றும் உரங்களை பிரித்து அளித்தல் முறைகளை பற்றியும் எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் செல்வி சிவபிரிய தர்ஷினி திட்டங்கள் மற்றும் உழவன் செயலி பற்றி எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார் ஆகியோர் விவசாயி களுக்கு செயல் விளக்கங்கள் வயல்வெளியில் செய்து காண்பித்தனர்.

# ஆலை அழுக்கு அங்கக எரு விழிப்புணர்வு பயிற்சி



கடலூர், நவ.19

மண் வள மேம்பாட்டின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், இயற்கை வள இடுப் பொருட்களை பயன் படுத்தி மண்ணின் வளத்தை பெருக்கி, நுண்ணுயிரி களின் எண்ணிக்கையை அதிகரித்து மண்ணின் கரிமச் சத்தை அதிகரித்து மகசூலை கூட்டும் வண்ணம் விழிப்புணர்வு நிகழ்ச்சி, கடலூர் மாவட்ட விலங்கல்பட்டு கிராமத்தில் அமையப் பெற்றுள்ள எஸ்.எல்.ஆர் எனர்ஜி மற்றும் கோல்வின் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் 19.11.25 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியினை திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், சிறப்புரையாற்றினார். இதில் வேளாண் உதவி இயக்குனர், சுரேஷ், இயற்கை வேளாண் திட்டங்களையும் மண்புழு உரம் பயன்பாடு பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

முனைவர் சுகுமாறன், ஆலை அழுக்கு அங்கக எரு பயன்படுத்தும் முறை, வெற்றி கதைகளைப் பற்றியும், தெளிவாக விளக்கினார். முனைவர் காயத்ரி, அங்கக இடுபொருட்கள் வகைகள் மற்றும் அதன் பயன்கள் பற்றியும் செயல்விளக்கமாக வாழை இட்டு காண்பித்தார்.

எஸ்.எல்.ஆர் நிறுவன பொது மேலாளர், சின்னப்பன், பண்ணைக் கழிவிலிருந்து மீத்தேன் எரிவாயு எடுக்கும் முக்கியத்துவத்தையும் அதிலிருந்து 30 கிலோ இயற்கை கேஸ் எடுக்க முடியும் என்பதையும், இது 40 லிட்டர் செயற்கை டீசல் எரிபொருளுக்கு ஈடான ஒரு எரிபொருளாகும்.

குப்பையை உரமாக மாற்றும் இந்திய அரசாங்கத்தின் கோட்பாட்டினை எடுத்துரைத்து அன்னிய செலவாணியை குறைக்க வேண்டும் என்பதை விரிவாக எடுத்துரைத்தார்.

அங்கக கரிமம் 14% மிகுந்துள்ளதை விவரித்தார். ஆலையின் செயல்பாட்டினையும், அங்கக கழிவின் பயன் பற்றியும், மீத்தேன் எரிவாயு தயாரிப்பின் இடர்பாடுகளைப் பற்றியும் விளக்கமளித்தார். வாழைக்கு ஆலை அழுக்கு உரம் இடும் செயல்விளக்கமும் காண்பிக்கப்பட்டது. இதில் ஐம்பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பாரத பிரதமரின் 21வது தவணை ஊக்கத்தொகை அளிக்கும் நேரடி நிகழ்ச்சி ஒளிபரப் பட்டது. கடலூர் மாவட்ட விலங்கல்பட்டு கிராமத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.




# வானில் வண்ண அதிசயம் - வானவில்



தற்போது மழை காலம் என்பதால் வானத்தில் வண்ணமாக தோன்றும் வானவில்லை (RAINBOW) அடிக்கடி பார்த்து ரசித்திருப்போம்.

பார்த்தவுடன் நம்மைக் கவரும் அழகான வானவில் தோன்ற மழை மட்டும் காரணமல்ல. பனி மூட்டம், காற்றில் மிதக்கும் கண்ணுக்கு தெரியாத தூசி, காற்றில் நிறைந்திருக்கும் நீர்த்துாளிகள் இவையும் முக்கிய காரணமாகும்.

**வானவில் பற்றி குட்டி கதை தெரியுமா?**

வேடிக்கையாக வானத்தை பற்றிய ஒரு கதை சொல்வதுண்டு. அப்போதெல்லாம் வானம் தலைக்கு எட்டும் தூரத்தில் இருந்தாம். அப்போது அது மனிதனின் தலையை இடித்துக் கொண்டிருந்தது. அதனால் எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்டாமல் போகனும், பத்து வண்டி நூல் போட்டாலும் பத்தாமல் போகனும் என்று மனிதன் கேட்க, வானம் மேலே சென்றதாக சிறுவயதில் கூற இக்கதையை கேட்டிருக்கிறோம்.

**வானவில்லின் நிறங்கள் என்ன?**

வானவில்லின் நிறங்கள் 7. அதை தான் VIBGYOR எனக் குறிப்பிடுகிறோம், (VIOLET, INDIGO, BLUE, YELLOW, ORANGE, RED). உண்மையிலே வானவில்லில் இந்த 7 நிறங்களையும் காண்பதுடன் கண்ணுக்கு தெரியாத பல நிறங்களும் உள்ளதாக தரவுகள் உள்ளன.

**வானவில்லின் ஒரு பகுதியை தான் நாம் பார்க்கிறோம்.**

மழை மேகங்கள், நீர்த்துளிகளாக சேர்ந்திருக்கும் சமயத்தில் தான் இந்த நிறங்கள் பார்க்கின்ற வாய்ப்பு கிடைக்கும்.

**வானவில் எப்படி உருவாகிறது?**

மழைக்காலங்களில் மேகங்களில் உள்ள நீர்த்துளிகளில் சூரிய ஒளி ஊடுருவும். அந்த ஒளி சிதறலடைந்து நீர்துளியின் பின்புறம் எதிரொலிப்பதால் வானவில் தோன்றுகிறது. இதை நிறப் பிரிகை வினை என்றும் சொல்லலாம்.

**வானவில் ஏன் அரைவட்டமாக தெரிகிறது?**

நமது கண்களுக்கு தெரிவது போல வானவில் அரை வட்டமாக இருக்காது. முழு வட்ட வடிவில் தான் தோன்றும். வளிமண்டலத்தின் மேற்பகுதியில் இருக்கும் நாம் அரை வட்டத்தை மட்டுமே நம்மால் பார்க்க முடியும். குறிப்பிட்ட கோணங்களிலிருந்து மட்டுமே வானவில்லை காண முடியும்.

அதனால் தான் நம்மூரில் பார்க்கின்ற வானவில்லை அடுத்த ஊரில் பார்க்க முடிவதில்லை.

என்ன பருவமழை காலங்களில் அடிக்கடி வானவில்லின் வர்ண ஜலங்களையும் பார்த்து ரசிப்போமா.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பணி விதை மாதிரி (Service Sample)

காலநிலை மாற்றத்தினால் வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் இடுபொருட்களின் பயன்பாடு ஆகியவற்றில் பல்வேறு மாற்றங்கள் வந்து கொண்டுள்ளது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்ளும் தொழில்நுட்பத்தில் தரமான இடுபொருட்களை பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும். வேளாண்மையில் பயன்படுத்தப்படும் இடுபொருட்களில் விதையே முதன்மையானதும் அவசியமானதும் ஆகும்.

விவசாயிகள் பயன்படுத்தும் விதையின் தரத்தினை அறிந்திட விதைப்பரிசோதனை அவசியமாகும். விதைப் பரிசோதனைக்கு விதை மாதிரிகள் சேகரிப்பு மூன்று வகைகளில் கையாளப்படு கின்றது.

1. சான்றளிப்பு விதை மாதிரி (Certification Sample)
2. அலுவல் விதை மாதிரி (Official Sample)
3. பணி விதை மாதிரி (Service Sample)

சான்றளிப்பு விதை மாதிரிகள் விதைச்சான்று அலுவலர்களால் விதைப்பண்ணை/சுத்திகரிப்பு அளவில் எடுக்கப்படுகின்றது. அலுவல் விதை மாதிரி விதை ஆய்வாளர்களால், விதை சுத்திகரிப்பு நிலையம், விதை விற்பனை நிலையங்களில் (அரசு, தனியார் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள்) சேகரிக்கப் படுகின்றது. பணி விதை மாதிரி விதையின் முளைப்புத்திறன் மற்றும் தரம் அறிந்திட விவசாயிகள், விதை விற்பனை யாளர்கள் நேரடியாக விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்புகின்றனர்.

விவசாயிகள் மற்றும் விற்பனையாளர்களுக்கு பணி விதை மாதிரிகள் எடுத்து அனுப்புவது குறித்து விழிப்புணர்வு விதை ஆய்வு துணை இயக்குநர், இராமநாதபுரம் அலுவலகத்தின் மூலம் செய்யப்படுகின்றது. விதை விற்பனை நிலையங்களுக்கு உற்பத்தியாளர்/மொத்த விற்பனையாளரிடமிருந்து விதைகள் பல்வேறு காலநிலை காரணிகட்கு உட்பட்டு வரப்பெறுகின்றது. இதனால் முளைப்புத்திறன் பாதிக்கப்படலாம்.

இந்நிலையில் உடனடியாக பணி விதை மாதிரிகள் எடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்வது பரிந்துரை செய்யப்படு கின்றது. விவசாயிகள் சேமித்து வைத்து பயன்படுத்த உள்ள விதைக்குவியலிலும் பணி விதை மாதிரி எடுத்து முளைப்புத் திறன் அறிவது அவசியமாகும்.

**விதைப்பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்ப வேண்டிய விதையளவு :**

நெல்-50 கிராம், மக்காச்சோளம்-500 கிராம், நிலக்கடலை-500 கிராம், உளுந்து மற்றும் பாசிப்பயறு தலா 100 கிராம், தக்காளி, கத்தரி, மிளகாய் தலா 10 கிராம். இவ்வாறு பயிருக்கு பயிர் பணி விதை மாதிரிகளின் அளவு மாறுபடும்.

ஒரு விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக ரூ.80/- வசூலிக்கப்படுகின்றது. விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு மேலும் பணி மாதிரிகள் குறித்து விவரங்கள் அறியலாம் என்று ம.இப்ராம்சா, விதை ஆய்வு துணை இயக்குநர், இராமநாதபுரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிசான் கோஸ்திஸ் – விவசாயிகள் ஒருங்கிணைப்பு முகாம்



சிவகங்கை, நவ.19

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்தில் 2025-26ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்திஸ் அனைத்து துறைகள் சார்ந்த ஒருங்கிணைப்பு முகாம் செட்டிகுறிச்சி வருவாய் கிராமத்தில் 18.11.25 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) பிரியா பொன் காயத்திரி தலைமையேற்று வரவேற்புரை வழங்கினார். வீ.பாலமுருகன், துணை வேளாண்மை அலுவலர், எஸ்.புதூர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட இந்த பஞ்சாயத்தில் தரிசு நிலங்களை விளைநிலமாக மாற்றும் நோக்கத்தில் 15 ஏக்கர் கொண்ட தரிசு நிலத் தொகுப்பு தேர்வு செய்யபட்டு அந்த தொகுப்பிற்கு ஆழ்துளை கிணறு சோலார் மோட்டர் இணைப்பு நுண்ணீர் பாசனம் அமைத்து பழ மரக்கன்றுகள் நடுவது குறித்தும் 1 பண்ணை குடும்பத்திற்கு 2 தென்னைகன்றுகள் இலவசமாக வழங்குதல், மானிய விலையில் பண்ணை கருவிகள் வழங்குதல், விவசாய இடுபொருட்கள், தார்பாய் வழங்குதல் குறித்து எடுத்துரைத்தார். மகாத்மா காந்தி ஊரக வளர்சி திட்ட பணியாளர்கள் மூலம் மரங்கள் நடுதல், வரப்புகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் எடுத்தரைத்தார். வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி உதவி பேராசிரியர் லோ.விமலேந்திரன், உதவி பேராசிரியர், வேளாண் அறிவியல் நிலையம்,குன்றக்குடி, பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய இரகங்கள் அறிமுகம் குறித்து எடுத்துரைத்தார்.

தோட்டக்கலைத் துறையின் மூலம் வீ.சரவணன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர், எஸ்.புதூர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தபடும் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் அதற்கு தேவைபடும் ஆவணங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.



ரெங்கராஜன், உதவி செயற் பொறியாளர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் தேவைபடும் ஆவணஙகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். கணேஷ்குமார், இளநிலை பொறியாளர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு பண்ணை கருவிகள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் செயல்படுத்தபடும் முறைகள் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். இரத்தினகாந்தி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை உதவி அலுவலர் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைபடுத்துதல் மற்றும் விற்பனை முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். கி.மாயாண்டி, விற்பனைக்கூட கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், சிங்கம்புணரி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு கொப்பரை தேங்காய் விற்பனை முறை மற்றும் விலை நிலவரம் மற்றும் சந்தைபடுத்துதல் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வருவாய் துரையின் மூலம் செல்வம், கிராம நிர்வாக அலுவலர் சிறு, குறு விவசாயிகளுக்கு சான்று பட்டா மாறுதல் குறித்த விபரங்களும் கிராம நிர்வாக அலுவலர் மூலம் விரிவாக எடுத்து கூறப்பட்டது. செல்வம், இயற்கை விவசாயி கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் சாகுபடி முறை பற்றியும் அதன் பயன்கன் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வனத்துறை அலுவலர் வாசுகி, கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வனத்துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். கால்நடைத் துறை உதவி அலுவலர் கார்த்திக், கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு கால்நடைத் துறையின் செயல்படுத்தபடும் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மைத் துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். இறுதியில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் கிராம பொது மக்களுக்கும் துணை வேளாண்மை அலுவலர் நன்றி தெரிவித்தார். நிகழ்சிக்கு உண்டான ஏற்பாட்டினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

# குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலம் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் பயிற்சி



புதுக்கோட்டை, நவ.19

புதுக்கோட்டை மாவட்ட குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2025-26 ஆம் ஆண்டிற்கான உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் பயிற்சி, வம்பன், திருவரங்குளம் வட்டார ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் பல்வேறு வட்டாரங்களை சார்ந்த உழவர் மன்ற அமைப்பாளர்கள் கலந்துக் கொண்டனர். மேலும், வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர்கள் (தோட்டக்கலை மற்றும் நுண்ணுயிரியல் துறை) கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.

இந்த பயிற்சியினை குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சி.ஜெயபாலன், துவக்கி வைத்து மண் வள மேலாண்மை, பலதானிய சாகுபடி, பசுந்தாள் உரங்கள், அங்கக வேளாண்மை குறித்த தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். இப்பயிற்சியில் வம்பன், வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் பி.கார்த்திகேயன், நெர்பயிரில் விதை நேர்த்தி, பூச்சி நோய் மேலாண்மை, உளுந்து பயிரில் உற்பத்தியை அதிகரிக்க நுண்ணூட்டம் இடுதல், அதன் முக்கியத்துவம், தமிழ்நாடு வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து தயாரிக்கப்படும் டானிக் வேளாண் பயிர்களுக்கு பயன்படுத்துதல் குறித்து எடுத்துரைத்தார்.

வம்பன், வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் எம்.தமிழ்செல்வன், சமவெளியில் மிளகு சாகுபடி தொழில்நுட்பங்கள், நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிதல், தென்னையில் பூச்சி நோய் மேலாண்மை, விளக்குப்பொறி பயன்படுத்துதல், காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அறந்தாங்கி வட்டார உழவர் மன்ற அமைப்பாளர் திருப்பதி மற்றும் அரிமளம் வட்டார உழவர் மன்ற அமைப்பாளர் அரங்க கோபாலகிருஷ்ணன், தனது விவசாய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த பயிற்சியின் முடிவில் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள், பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணை வித்துப்பயிர் ரகங்கள், மண்புழு உரம் தயாரித்தல், பாரம்பரிய நெல் இரகங்களின் சிறப்பம்சங்கள், அரசு திட்டங்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப கையேடு விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) சி.ஜெயபாலன், வழங்கினார்.

இப்பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகி செய்திருந்தார், பயிற்சியின் முடிவில் நன்றியுரை கூறினார்.




# மக்காச்சோள பயிரில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை தடுப்பது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் விளக்கம்

மக்காச்சோளம் பயிரை அதிகமாக தாக்கும் அமெரிக்கன் படைப்புழுவை கட்டுப்படுத்தி பயிரை பாதுகாக்கும் வழிமுறை குறித்து திருச்சிராப்பள்ளி வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆண்டு சுமார் 21,000 ஹெக்டர் வரை மக்காச்சோளம் பயிர் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்காச்சோளம் பொதுவாக ஒரு ஏக்கருக்கு 20 முதல் 25 குவிண்டால் வரை மகசூல் பெற்றுத் தரும் பயிராகும்.

மகசூல் இழப்பு ஏற்படாமல் இருக்க விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் பூச்சி, நோய் கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

அமெரிக்கன் படைப்புழு நெல், மக்காச்சோளம், காய்கறி பயிர்கள் உட்பட 80 வகையான பயிர்களை தாக்கும் வல்லமை கொண்டது.

மக்காச்சோளப் பயிரை அதிகளவில் இப்பூச்சி தாக்கி மகசூல் இழப்பை உருவாக்கும். இதனை ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளால் கட்டுப்படுத்திடல் வேண்டும்.

ஆரம்ப நிலையில் உள்ள பயிர்களில் இப்புழுவானது இளம் இலைகளின் தசைகளை உட்கொள்ளும் இலைகளின் ஓரங்களிலிருந்து உள்நோக்கி ஓட்டைகளை உருவாக்கும். பயிர்களின் இலைகளில் இவ்வோட்டைகளை ஆரம்ப நிலையிலேயே கண்காணித்து கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடித்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட இளம் செடிகளின் மீதுகாய்ந்தமணல் இடுவதாலும் இப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

**வரப்பு பயிர்**

வரப்பு பயிர் மூலம் மக்காச்சோளப் பயிரை படைப்புழு தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்தலாம். இறவை மக்காச்சோளத்தை

சுற்றிலும் 3 வரிசைகளில் தட்டைப்பயறு, எள், துவரை அல்லது சூரியகாந்தி பயிரை நடலாம். மானாவாரிப் பயிராக இருந்தால், வரப்பு பயிராக தீவனச் சோளத்தை நடலாம்.

### இடைவெளி அவசியம்

பயிர்கள் நெருக்கமாக இருந்தால் பயிர்களுக்கு இடையே படைப்புழு வேகமாக பரவும். எனவே, இறவை மக்காச் சோளத்திற்கு வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டரும், பயிருக்கு பயிர் 20 சென்டிமீட்டரும் இடைவெளிவிட வேண்டும். மக்காச் சோளப் பயிரில் வரிசைக்கு வரிசை 45 சென்டிமீட்டர், பயிருக்கு பயிர் 20 சென்டிமீட்டர் இடைவெளியும் பத்து பயிர் வரிசைக்கு 75 சென்டிமீட்டர் இடைவெளியும் விடவேண்டும். இதனால் பயிர் பாதுகாப்பு செயல்பாடுகள் எளிதாகும்.

### இனக்கவர்ச்சி பொறிகள் நிறுவுதல்

விதைத்த 7 முதல் 10 நாட்களுக்குப் பிறகு ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து படைப்புழுவின் அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்திடலாம். பொறியில் பொருத்தப்படும் லூரை 20 நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். பூச்சிகள் அதிகமாக காணப்பட்டால் ஏக்கருக்கு 20 பொறிகள் வைத்து அந்துப் பூச்சிகளை அதிக அளவில் கவர்ந்து அழிக்கலாம்.

பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்கும் போது, மருந்து மக்காச்சோளத்தின் நடுப்பகுதியான சுருளுக்குள் சென்று சேருமாறு கவனமாகத் தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் பயன்படுத்தி பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளிக்க வேண்டும். ஒரு முறை உபயோகித்த பூச்சி மருந்தை திரும்ப உபயோகிக்க கூடாது. பரிந்துரை இல்லாத ரசாயன பூச்சி மருந்துகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது.

இந்த ஒருங்கிணைந்த முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், படைப்புழுவின் சேதத்தை வெகுவாகக் குறைத்து அதிக மகசூலை பெற விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.



# இப்கோ பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி – ஒரு பார்வை



சென்னை, நவ.19

இப்கோ சார்பில், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின் 21வது தவணை நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்தபட்ச வருமான ஆதர வாக இந்திய அரசாங்கம் ஆண்டு தோறும் ரூ.6,000 நிதி உதவி வழங்கும் இந்த திட்டத்தின் 21வது தவணையாக ரூ.18,000 கோடி பிரதமர் மோடி, கோயம்புத்தூரில் நேற்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி, மாநிலம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உர விற்பனை நிலையங்களில் இப்கோ கள அதிகாரிகளால் நேரலையாக ஒளிபரப்பு செய்யப் பட்டது. நிகழ்வின் ஒரு பகுதியாக, அதிக உரப் பயன்பாட்டால் மண், நீர் மற்றும் சுற்றுச்சூழலுக்குஏற்படும் பாதிப்புகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தடுக்க மாற்று தீர்வாக நானோ உரங்களின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. மேலும், நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க் மற்றும் நானோ காப்பர் போன்ற நானோ திரவ உரங்களின் சிறப்பம்சங்கள், பயன்பாட்டு முறை, தேவையான அளவு மற்றும் பயிர்களில் பயன்படுத்திய பின் காணப்படும் முன்னேற்றங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதோடு, இப்கோ வழங்கும் விவசாயிகள் விபத்து காப்பீடு திட்டமான சங்கட் ஹாரன் பீமா யோஜனா பற்றிய தகவலும் வழங்கப்பட்டது. மேலும், PM-KISAN திட்டத்தின் நோக்கம், பயன்கள் மற்றும் திட்டம் வழங்கும் நிதி ஆதரவின் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்க ப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பாரதப்பிரதமரின் 21வது உழவர்கள் கௌரவ நிதி நேரடி ஒளிபரப்பு



புதுக்கோட்டை, நவ.19

புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி - 21வது தவணை நிதி விடுவிப்பு 19.11.25 நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி யினை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் சுப.மாரிமுத்து துவக்கி வைத்து தலைமையுரையாற்றுகையில் தேசியபயறு இயக்கம் மற்றும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத் தார். பிரதம மந்திரியின் உரை நேரடி காணொலி ஒளிபரப்பினை விவசாயிகள் கண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் சி.ஜெய பாலன், வேளாண்மை துணை இயக்குனர், உழவர் பயிற்சி மையம், குடுமியான்மலை பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தின் விவரங்கள் மற்றும் விவசாயிகளுக்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்கள் பற்றியும் விவசாயி களுக்கு விளக்கினார். முனைவர் அ.அழகேசன், தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), இயற்கை வேளாண்மை பற்றி விவரித்தார்.

முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) வேளாண் விளைபொருட்களில் மதிப்புக் கூட்டுதல் பற்றியும், முனைவர் ம. தமிழ்ச்செல்வன், உயர்தர காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றியும் மற்றும் முனைவர் பா.கார்த்திகேயன், தொழில்நுட்ப வல்லுநர் (நுண்ணியல்) உயிர் உரங்கள் பற்றியும் பயிற்சி அளித்தனர். மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயி களுக்கும் பழ மரக்கன்றுகள் மற்றும் கோ 5 தீவனப்புல் இடு பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நூற்றிற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ் மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக கார்த்திகை மாதத்தில் விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்தப் பட்டத்தில் சாகுபடி செய்யும் போது போதிய மழை, சரியான வெப்பநிலை சாதகமாக இருப்பதால், அதிக மகசூல் பெறப்படுகிறது. நிலக்கடலை உற்பத்தியில் அதிக மகசூலை பெற தரமான விதைகளைப் பயன்படுவத்துவது முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகும்.

நிலக்கடலையைப் பொருத்தவரை பயன்படுத்தப்படும் விதைகளுக்கு குறைந்தபட்சம் 70 சதவிகிதம் முளைப்புத்திறனும், 96 சதவீதம் புறத்தூய்மையும் கட்டாயம் இருக்க வேண்டும். மேலும் விதையின் அதிகப்பட்ச ஈரப்பதம் 9 சதவீதம் இருக்க வேண்டும். நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே ஆகும். எனவே நல்லத் தரமான சான்று பெற்ற விதையைத் தேர்வு செய்து விதைப்பு மேற்கொண்டு, பயிர் எண்ணிக்கையைப் சரியாக பராமரித்தால் அதிக மகசூல் பெறலாம். எந்த ஒரு பயிருக்கும் பயிர் எண்ணிக்கை என்பது மகசூலைக் கணிக்கும் முக்கிய அம்சமாகும். மேலும் தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது ஏக்கருக்கு சராசரி மகசூலைவிட 30 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம். எனவே மகசூல் அதிகப்படுத்துவதற்கு காரணியாக விளங்குவதே விதையின் தரமே ஆகும்.

மேலும் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் விதை நிலக்கடலையைக் கட்டாயம் விதை பரிசோதனை செய்த பிறகே விதைப்பு மேற்கொள்ள வேண்டும். எனவே விவசாயிகள் தங்கள் கையிருப்பில் உள்ள விதை நிலக்கடலையில் 500 கிராம் அளவுக்கு விதை மாதிரி எடுத்து ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்)

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

விதை பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ எண்.15, காளியம்மன் கோவில் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்ட இத்தகவல் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், நாகப்பட்டினம், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் அ.அமுதாதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.




# விதை விற்பனையின் போது லேபிள் கட்டாயம் வேண்டும்

விருதுநகர், நவ.19

விதை விற்பனை செய்யும் போது விதையின் விவரங்கள் அடங்கிய லேபிள் கட்டாயம் இடம் பெற்றிக்க வேண்டும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் த.வளர்மதி தெரிவித்துள்ளார்.

விதை விற்பனையாளர்கள் விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதைக் (கட்டுப்பாட்டு) ஆணை 1983 மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955 ஆகியவற்றை கடைபிடித்து விதை விற்பனை செய்ய வேண்டும். விவசாயி களுக்கு விதை விற்பனை செய்யும் போது உரிய ரசீது வழங்க வேண்டும்.

விவசாயி பெயர், முகவரி, அலைபேசி எண், கையெழுத்து, விற்பனையாளர் ஒப்பம், பயிர் ரகம், குவியல் எண், அளவு, விலை, மொத்த தொகை மற்றும் விற்பனை நிலையத்தின் முகவரி, பில் எண், நாள் உள்ளிட்ட விவரங்கள் இருக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ரசீது வழங்காமால் விதைகள் விற்பனை செய்யக்கூடாது.

அதே போல் விதைகள் விற்பனை செய்யும் கலன்களில் லேபிள் இடம் பெற்றிருக்க வேண்டும். இதில் லேபிள் எண், பயிர் ரகம், குவியல் எண், பரிசோதனை செய்த நாள், காலாவதி நாள், முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை, எடை, விதை நேர்த்தி செய்திருந்தால் அதன் விவரம், விதை உற்பத்தியாளர், விற்பனையாளர் விவரம், பரிந்துரைக்கப்பட்ட பருவம், மாநிலம் சார்ந்த விவரங்கள் இருக்க வேண்டும்.

ஆதார விதை, சான்றளிக்கப்பட்ட விதை, உண்மை நிலை விதை ஆகியவற்றிக்கு மேற்காணும் விவரங்கள் அடங்கிய லேபிள் கட்டாயம் இருக்க வேண்டும் என வத்திறாயிருப்பு மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டாரங்களில் ஆய்வு மேற்கொண்டபோது விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் த.வளர்மதி தெரிவித்துள்ளார்.

# பாரதப்பிரதமரின் 21வது உழவர்கள் கௌரவ நிதி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது



திருவண்ணாமலை, நவ.19

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லியில், பாரதப் பிரதமரின் 21வது கௌரவ விவசாயிகள் நிதி வழங்குதல் மற்றும் கோயம் புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை விவசாய உச்சி மாநாடு நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியில் பாரதப் பிரதமர் ஆற்றிய உரை காணொலி வாயிலாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வே.சுரேஷ், வருகை தந்த அனைவரையும் வரவேற்று, இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், இயற்கை விளைபொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை படுத்துதல் பற்றியும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் ப.நாராயணன், அங்கக முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரிப்பு முறை பற்றியும் விளக்கமளித்தார். தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ர.விஜயகுமார், தோட்டக் கலைப் பயிர்களில் இயற்கை விவசாயத்தின் பங்கு மற்றும் மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகளின் சந்தேகங் களுக்கு விளக்கமளித்தார்.

இந்நிகழ்ச்சியின் இயற்கை விவசாயத்தில் வெற்றிகண்ட விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது விவசாயிகளின் பல்வேறு சந்தேங்களுக்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த 249 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்ச்சியின் முடிவில் மண் ஆய்வாளர் ப.சௌத்திரி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.